பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 29 வெள்ளிக்கிழமை 15.10.2021 கதிர் 207

## துப்பாக்கி ரவைகள் பெருமளவில் மீட்பு!

கொழும்பில் ஐந்து மாடிகளைக் கொண்ட கட்டடமொன்றிலிருந்து, பெருந்தொகையான துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன என்று கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

2

## விபத்தில் காயமடைந்த இளைஞர் உயிரிழப்பு!



யாழ்., சாவகச்சேரியில் இடம் பெற்ற வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் சிக்கி படுகாயம் அடைந்த குறித்த இளைஞர் இன்று அதி காலை மரணமடைந்துள்ளார்.

மடத்தடிப் பகுதியில் டிப்பர் வாகனமும் மோட்டார்

2

## மீனவர்களுக்காகப் போராடுவதாக வேஷம் போடும் தமிழ் விரோதிகள்

### இப்படிக் குற்றஞ்சாட்டுகின்றது தேசிய மீனவர் இயக்கம்



(இ.கலையமுதன்)

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் இன்று மீனவர்களுக்காகப் போராடுவதாக வேஷம்போடுகின்றனர்.

- இவ்வாறு தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ்ப்பாணம் மாவட்ட இணைப்பாளர் இன்பம் குற்றஞ்சாட்டினார்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஊடக சந்திப்பு யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை

2

# தமிழர் உரிமையை வென்றெடுக்க இந்தியா துணை நிற்க வேண்டும்!

## அப்துல் கலாமின் பிறந்தநாள் நினைவில் யாழ். மேயர் மணிவண்ணன் கோரிக்கை





(இ.கலையமுதன்)

தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்க இந்தியா எமக்குத் துணை நிற்கவேண்டும். எமது தந்தை நாடு என்ற அடிப் படையில் அது நமக்குத் துணை நிற்கவேண்டும் என்ற கோரிக்கையை நான் விடுக்கின்றேன்.

2

## உரத்தைப் பெற்றுத் தருமாறு கோரி கிளிநொச்சியில் இன்று போராட்டம்



விவசாயச் செய்கைக்குத் தேவையான உரத்தைப் பெற்றுத் தருமாறு கோரி, கிளிநொச்சியில் இன்று கவனவீர்ப்புப் போராட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

2

## இழுவைப் படகுகளுக்கு எதிரான பேரணிக்கு ஆதரவு வழங்குங்கள்!

### அனைத்து மக்களிடமும் சுமந்திரன் எம்.பி. வேண்டுகோள்



இழுவைப் படகு தடைச் சட்டத்தை முறையாக அமுல்படுத்துமாறு கடற்தொழில் நீரியல்துறை அமைச்சரைக் கோரி எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவிலிருந்து பருத்தித்துறை வரை கடல் வழியாக நடைபெறவுள்ள எதிர்ப்புப் பேரணிக்கு அனைத்து மக்களும் ஆதரவு நல்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான

2

## ஒக். 21 வரை மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாட்டைக் கடுமையாக்குக!

### பாதுகாப்புத் துறையினருக்கு ஜனாதிபதி பணிப்புரை



நாட்டில் தற்போது நடைமுறையில் இருக்கும் மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை, இம்மாதம் 21ஆம் திகதி வியாழக்கிழமை வரை கடுமையாகக் கடைப்பிடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 19 மற்றும் 20ஆம் திகதிகள் விடுமுறை தினங்களாக அமையப்பெற்று நீண்ட விடுமுறையுடன் கூடிய வார இறுதி அமையப்பெறவுள்ளமையால், அனைத்து மாகாண எல்லைகளிலும் போக்குவரத்து நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளைத் தீவிரமாக முன்னெடுக்குமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பாதுகாப்புத் துறையினருக்குப் பணிப்புரை விடுத்தார்.

இன்று முற்பகல், வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக நடைபெற்ற கொரோனா ஒழிப்புச் செயலணிக் கூட்டத்தின்போதே, ஜனாதிபதி மேற்கண்ட பணிப்புரையை

2

## மேலும் 72 பேர் சிக்கினார்கள்

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 72 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய கடந்த வருடம் ஒக்ரோபர் 30ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 80 ஆயிரத்து 862 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்

2

## துப்பாக்கி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிஸ்டல் வீதியில், பல்வேறு தனியார் நிறுவனங்கள் அமைந்துள்ள கட்டடத்தின் 5ஆவது மாடியிலுள்ள மலசலகூடத்தில் இருந்தே, இந்தத் துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

ரி-56ரகதுப்பாக்கிக்குப்பயன்படுத்தப்படும் 176 ரவைகளும், 9 மில்லிமீற்றர் துப்பாக்கிக்குப் பயன்டுத்தப்படும் 29 ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

துப்பாக்கி ரவைகள், குறித்த கட்டடத்துக்கு எவ்வாறு கொண்டுவரப்பட்டன என்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம் என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## தமிழர் உரிமை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு யாழ்ப்பாணம் மாநகர மேயர்சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இன்று நடைபெற்ற இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அமரர் அப்துல் கலாமின் 90 ஆவது பிறந்த நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் ஒருபோதும் பாரத தேசத்தின் நலன்களுக்கு முரணாகச் செயற்படப் போவதில்லை. நாங்கள் பாரத தேசத்தின் உறவுகளாக, தொப்புள்கொடி உறவுகளாக, அவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக, அவர்களின் பொருளாதாரத்தை - அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய ஒரு தரப்பாக இந்தத் தேசத்தில் இருப்போம்.

எம்மைப் பொறுத்தவரை பாரத தேசம் என்பது எமது தந்தையர் நாடு. நம் தந்தையர் நாடான பாரத தேசத்தை பின்பற்றி செயற்படுகின்றோம்.

தென்னிந்தியா என்பது எமது தொப்புள் கொடி உறவுகள் வாழ்கின்ற இடமாகும். ஆகவே, பண்பாட்டு ரீதியாகவும் பாரத தேசத்தை நாங்கள் பின்பற்றுகிறோம். எங்கள் அரசியல் கலாசாரத்திலும் பாரத தேசத்தின் அரசியல் கலாசாரத்தை பின்பற்றுகின்றோம்.

பாரத தேசத்தில் இந்திய சுதந்திரப் போராட்டத்தைப் பின்பற்றுகின்றவர்களை நினைவுகூருவதைப் போல் இங்கேயும் நாம் அவர்களை நினைவுகூரும் பண்பாட்டை பின்பற்றி வருகின்றோம்.

குறிப்பாக இன்றைய விஜயதசமி நாளில் - அப்துல் கலாமின் பிறந்தநாள் நினைவு தினத்தில் பாரத தேசத்துக்கு ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன். எமது நீண்டகால உரிமைக் கோரிக்கைக்கு பாரத தேசம் செவிசாய்க்க வேண்டும்.

நாம் தென்னிலங்கையில் இருக்கும் சிங்கள மக்களுக்கும் எதிரானவர்கள் அல்லர். நாங்கள் மற்றைய இனத்தை அழிப்பதற்காக எமது உரிமையைக் கோரவில்லை. நாங்கள் எம்மை பாதுகாத்துக்கொள்வதற்காக - எம்மை வளர்த்துக்கொள்வதற்காக எமக்கு உரிமை வேண்டும் என கடந்த 60 வருடங்களாகப் போராடி வருகின்றோம்.

அந்தவகையில் பாரத தேசம் எமது கோரிக்கையை நியாயமாகப் புரிந்து எமது கோரிக்கைகளை அடைவதற்கு அழுத்தங்களையும் ஒத்துழைப்புகளையும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்- என்றார்.

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் இன்று முற்பகல் 11 மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அப்துல் கலாமின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணை தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், யாழ்ப்பாணம் மாநகர மேயர் வி.மணிவண்ணன், யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் பிரதம நூலகர் மற்றும் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மீனவர்களுக்காக .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில், இந்திய இழுவைமடித் தொழிலால் மீன் வளங்கள் அழிக்கப்படுவதுடன் எமது தொழில் வளங்களும் நாசமாக்கப்படுகின்றன.

அண்மையில் வடமராட்சியில் மீனவர்கள் தங்களுக்கு ஏற்பட்டு வரும் பிரச்சினைகள் தொடர்பாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அது அவர்களுக்கு மட்டுமான பிரச்சினை அல்ல. ஒட்டுமொத்த மீனவர்களுக்குமான பிரச்சினை.

மீனவர்களின் பல்வேறு பிரச்சினைகளுக்காக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம்குரல்கொடுத்துவந்தநிலையில் அதனை அரசும் அரச தரப்பினரும் குழப்புகின்ற வேலையைச் செய்து வருகின்றனர்

மீனவர்களுடைய பிரச்சினை அரசியல் நோக்கத்துடன் கையாளப்படுகின்றது. இரண்டு நாட்டு மீனவர்களுக்கும் மோதலை ஏற்படுத்துவதற்காக ஒரு சிலர் திட்டமிட்டுச் செயற்படுகின்றனர்.

இருநாட்டுமீனவர்களிடையே முரண்பாடுகளைத் தோற்றுவித்து அவர்களைப் பலிக்கடாவாக்குகின்ற செயற்பாடுகளுக்கு ஒரு சில கோடாரிக் காம்புகளும் துணை நிற்கின்றன.

தமிழ்மக்களின்அரசியல்அபிலாஷைகளுக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் இன்று மீனவர்களுக்காகப் போராடுவதாக வேஷம் போடுகின்றனர். அவர்களுடைய நோக்கம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதா? இந்தப்பிரச்சினையை வைத்து குளிர்காய்வதா? என்கின்ற கேள்வி எழுகின்றது.

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதுவரை எமது மீனவர் சங்கங்கள் சந்தித்தபோது இலங்கை கடற்றொழில் அமைச்சர் எதுவும் செய்யவில்லை என்றும், நாங்கள் இந்த விடயத்தில் எந்த முடிவும் எடுக்க முடியாது என்றும், உரிய தரப்புகளுக்குத் தெரியப்படுத்துவோம் என்றும் தூதுவர் தெரிவித்தார் - என்றார்.

இந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட ரட்ணசிங்கம் முரளீதரன் கருத்துத் தெரிவிக்கையில்,

இதற்கு மேலதிகமாக தற்போது கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. இந்தத் திட்டத்தின் போது கடல்நீர் சுத்திகரிக்கப்பட்டு அதில் உள்ள உப்பு செறிவு என்பது மீண்டும் கடலில் கலக்கின்ற ஒரு அபாயநிலை காணப்படுகின்றது. இதன் காரணமாக கடல் வாழ் உயிரினங்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதற்கான சூழல் காணப்படுகின்றது.

வெளிநாட்டு மீனவர்கள் இலங்கைக் கடலில் மீன் பிடிப்பதற்கான பாஸ் நடைமுறை வழங்குவதற்கான திட்டம் தற்போது பரிசீலனையில் காணப்படுகின்றது. இது மிகவும் ஆபத்தானது - என்றார்.

## இழுவைப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் இன்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

எமது கடல் வளத்தையும் நீரியல் வளத்தையும் மிக மோசமாக அழிக்கும் இழுவைப்படகுகள், 2017ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளன. ஆனாலும், கடற்றொழில், நீரியல் அதிகாரிகள் இந்தத் தடையை அமுல்படுத்தாத காரணத்தால் உள்ளூர், வெளிப்பிரதேச மற்றும் வெளிநாட்டு இழுவைப்படகுகள் தொடர்ச்சியாக எமது கடல் வளத்தை முற்றாக சூறையாடுகின்றன.

இந்தநிலை தொடருமாக இருந்தால் அடுத்த தலைமுறைக்கே கடல் வளம் இல்லாது போய்விடும்.

இந்தச் சட்டத்தை முறையாக அமுல்படுத்தக் கோரி எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவிலிருந்து பருத்தித்துறை வரை கடல் வழியானஎதிர்ப்புப்பேரணிஇடம்பெறும்.

இழுவைப் படகு தடைச் சட்டத்தை முறையாக அமுல்படுத்துமாறு கடற்தொழில் நீரியல்துறை அமைச்சரைக் கோருவதே இந்தப் பேரணியின் நோக்கமாகும். அனைத்து மக்களும் இந்த எதிர்ப்புப் பேரணிக்கு ஆதரவு நல்குமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## உரத்தைப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 10 மணிக்கு கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை முன்பாக இருந்து மாவட்ட செயலகம் வரை சென்ற பேரணி, மாவட்ட செயலகத்தில் நிறைவடைந்து ஜனாதிபதி, விவசாய அமைச்சர், மாவட்ட அரச அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கான மகஜர் கையளிக்கப்பட்டது.

மகஜர்களை கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் பெற்றுக்கொண்டார்.

குறித்த போராட்டத்தில், சேதனப் பசளை உரிய தரத்தில் கிடைப்பதில்லை. கிளிநொச்சி மாவட்டத்தில் 40 வீதமான நிலங்கள்பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில், விவசாயிகளுக்குத் தேவையான உரத்தை சம்பந்தப்பட்ட தரப்பினர் பெற்றுத் தர வேண்டும் - என்று வலியுறுத்தப்பட்டது.

## ஒக்.21 வரை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்தார்.

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களான 18 - 19 வயதுக்கு இடைப்பட்டோருக்கான தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கைகள், இன்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

அத்துடன், ஏனைய மாவட்டங்களிலுள்ள மேற்படி வயதுப் பிரிவைச் சேர்ந்த அனைத்துப் பிள்ளைகளுக்கும், இம்மாதம் 21ஆம் திகதி முதல், பாடசாலைகள் மற்றும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஊடாகத் தடுப்பூசி ஏற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சுகாதாரத் துறையினரின் பரிந்துரைகளுக்கு அமைவாக, பாடசாலை மாணவர்களுக்கு ஒரு டோஸ் தடுப்பூசியும் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு இரண்டு டோஸ் தடுப்பூசிகளும் செலுத்தப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசிகள் செலுத்தப்பட்ட பின்னர், சுகாதாரப் பரிந்துரைகளுக்கமைய, நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்கான மூன்றாவது டோஸ் தடுப்பூசியைச் செலுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமையன்று, மேலும் 6 லட்சம் பைஸர் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறவுள்ளன என்றும், கோரப்பட்டிருந்த தடுப்பூசிகள் தொடர்ந்து கிடைத்துக்கொண்டு இருக்கின்றன என்றும் கொரோனாத் தடுப்புச் செயலணியின் உறுப்பினரும் விசேட வைத்திய நிபுணருமான பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையை மேலும் குறைத்துக் கொள்வதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றும், தொற்றுக்கு இலக்காகும் நோயாளிகள் தற்போது கண்டறியப்படும் பிரதேசங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி, அவ்விடங்களைத் தனிமைப்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

கொரோனா ஒழிப்புக்காக சுகாதாரத் தரப்பினர் பின்பற்றிய வீட்டுத் தனிமைப்படுத்தல் வேலைத்திட்டமானது, உலக சுகாதார ஸ்தாபனத்தின் விசேட பாராட்டைப் பெற்றுள்ளது என விசேட வைத்திய நிபுணர் அநுருத்த பாதெனிய, கொவிட் ஒழிப்புச் செயலணிக் கூட்டத்தின்போது அறிவித்தார்.

## விபத்தில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைக்கிளும் மோதுண்டதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

படுகாயம் அடைந்த இளைஞர் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டுவந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த 24 வயதான வ.நிரோஷ் என்பவரே மரணமடைந்துள்ளார்.

இவர் அண்மையிலேயே வெளிநாடு ஒன்றிலிருந்து நாடு திரும்பியிருந்தவர் என்று விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

## மேலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொலிஸ் தலைமையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## போராட்டத்தில் கவனம்

விவசாயிகளின் நெருக்கடிகளை ஒட்டியும், மீனவர்களின் பிரச்சினைகளை விளக்கியும் நாளை மறுதினமும் அடுத்த நாளும் போராட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு இருக்கின்றது.

இந்தச் சூழ்நிலையில் தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா ஒரு விடயத்தை சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

"வடக்குத் தமிழ் மீனவர்களை இந்திய மீனவர்களுடன் மோத வைக்கும் நோக்கத்துடன் சில அரசியல் சக்திகள் திரை மறைவில் செயற்படுகின்றன. கடற்தொழிலாளர்கள் மத்தியில் எழுந்துள்ள கோபத்துக்கு எண்ணெய் ஊற்றுகின்றனர் என்ற சந்தேகம் கிளம்பியுள்ளது. அதிகாரத்தின் ஆதி மூலத்தோடு இந்த விடயம் தொடர்பாக அனைவரும் அழுத்திப் பேசி இதற்கு உரிய தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும்" – என்று அவர் கூறியிருக்கின்றார்.

"வடபகுதி மீனவர்களின் ஜீவாதாரம் அழிக்கப்படும் பேராபத்து நெருங்கி வருவதன் காரணமாகவே அவர்கள் கொந்தளிக்கத் தொடங்கி உள்ளனர். இருதரப்பு மீனவர்களுக்கும் இடையில் மோதல்களை ஏற்படுத்துவதன் ஊடாக இலங்கை தமிழ் மக்களுக்கு தமிழ்நாட்டில் இருக்கும் ஆதரவுத் தளத்தை ஆட்டம் காண வைக்க முடியும் என்ற நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் சிங்களப் பேரினவாதிகள் செயல்படுகையில் எம் மத்தியில் உள்ள ஒத்துழைப்பு அரசியல்வாதிகள் அதற்குத் துணை போவது ஒன்றும் ஆச்சரியத்திற்குரியது அல்ல" – என்று வெளிப்படையாகப் பேசியிருக்கிறார் ஸ்ரீகாந்தா. அவர் சுட்டுவது போல இது ஓர் உணர்ச்சி பூர்வமான விடயம். தமிழர்களைப் பொறுத்தவரை கடல்வளம் மட்டுமல்ல, பல வழிகளிலும் அவர்களது தேசம் சூறையாடப்பட்டு கொண்டிருக்கையில் அவர்களுக்குத் தார்மீகப் பக்கபலமாக இருக்கும் பிரதான தளம் இந்தியா. அதுவும் குறிப்பாக தமிழகம். சட்டத்தரணி ஸ்ரீகாந்தா சுட்டிக்காட்டுகின்றமை போல இன்றைய நிலையில் அன்னக்காவடிகளாக அந்தரிக்கும் ஈழத்தமிழர்களை, சர்வதேச அரங்கில் மேலும் கேட்பாரின்றி நாதியற்றவர்கள் ஆக்கும் முயற்சிதான், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான தமிழகத்தின் நிலைப்பாட்டையும் அதன் மூலம் இந்தியாவின் வலிமையான ஆதரவையும் இல்லாமல் செய்யும் எத்தனம் ஆகும்.

அத்தகைய விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய உணர்ச்சி பூர்வமான விடயங்களில் மிக கவனமாகவும் எச்சரிக்கையுடனும் நாம் காய் நகர்த்த வேண்டும்.

இந்தியாவையும் – குறிப்பாக தமிழகத்தையும் – ஈழத் தமிழர்களிடமிருந்து பிரித்து வைக்கும் நடவடிக்கையை நாமாக முன்னெடுப்பது நமக்கு நாமே தலையில் மண் வாரிப் போடும் வேலை.

புலிகள் நடத்திய ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தை – சுதந்திர வேள்வியை – சர்வதேச தரப்புகளைப் புலிகளுக்கு எதிராகத் திருப்பி அவர்களைப் பயங்கரவாதிகளாக சித்திரித்ததன் மூலம் வெற்றிகொண்டது பௌத்த சிங்களப் பேரினவாத தந்திரோபாயம்.

இப்போதும் நலிவுற்றிருக்கும் ஈழத்தமிழர்களுக்கு நாதியாக நிற்பது இந்தியாவும் நமது தொப்புள் கொடி உறவுகளான தமிழகமும்தான்.

நமது மீனவருக்கு நியாயம் கேட்கின்றோம் என்பதிலும் கூட, விளைவுகளைக் கவனத்தில் எடுத்து நாசூக்காகக் காய் நகர்த்த வேண்டும். இதில் அதிக முன்னெச்சரிக்கையும் பக்குவமும் கூட அவசியம். எங்கள் போராட்டம் எமது கடலில் மீன் வளத்தை நாசமாக்கும் ட்ரோலர்கள், இழுவை மடி வலை பாவனை போன்றவற்றுக்கு எதிரானதே. அது தொடர்பான சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் பார்த்திருந்து, இலங்கை – இந்திய மீனவர்களை மோத விடும் பௌத்த, சிங்களப் பேரினவாத அரசுக்கு எதிரானது என்பதை தெளிவுபடுத்தி, அந்தத் தெளிந்த சிந்தனையை பக்குவமாக வெளிப்படுத்தி, முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஈழத் தமிழர்கள் – தமிழக மக்கள் தொப்புள் கொடி உறவை சீர்குலைக்காமல் கவனமாக காய் நகர்த்த வேண்டும்.

# மத்தியவங்கி பணம் அச்சிடுவதற்கும் விலையேற்றத்துக்கும் தொடர்பில்லை!

## ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் கூறுகின்றார்

பணம் அச்சிடப்படுவதற்கும் பொருள்களின் விலை ஏற்றத்துக்கும் தொடர்பு கிடையாது என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி, வெளிநாடுகளில் பொருள்களின் விலைகளில் ஏற்பட்ட மாற்றம் ஆகியனவே இந்த விலையேற்றத்துக்குக் காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார். கொழும்பில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில் – மத்திய வங்கியின் இணையத் தளத்துக்கு பிரவேசித்து இந்தத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். எவ்வளவு தொகைப் பணம் அச்சிடப்பட்டுள்ளது என்பதனை அறிந்து கொள்ள முடியும். பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த வேண்டியுள்ளது. நாம் இந்த விடயம் தொடர்பாக மிகுந்த அவதானத்துடன் முகாமைத்துவம் செய்கின்றோம். எரிபொருள் மற்றும் எரிவாயுவின் விலை அதிகரித்தமைக்கும் பணம் அச்சிடலுக்கும் தொடர்பில்லை. பொருள்களின் விநியோகத்தில் ஏற்பட்ட பிரச்சினை மற்றும் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி போன்றனவே விலை ஏற்றத்துக்கான காரணமாகும் என அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

# நாகர்கோயில் களப்பு பகுதியில் நேற்று மீன் குஞ்சுகள் விடப்பட்டன



யாழ். குடாநாட்டின் நாகர்கோயில் களப்பு பகுதி நீரேரிகளில் ஒரு தொகுதி மீன்குஞ்சுகள் விடப்பட்டன.

பருவகால கடலுயிரின வளர்ப்பை அபிவிருத்தி செய்யும் நோக்கில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நாடளாவியரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் குறித்த கருத்திட்டத்துக்கு அமைய வடபகுதியில் பல்வேறு பகுதிகளில் உள்ள நன்னீர் நிலைகளில் மீன் குஞ்சுகள் விடப்பட்டு வருகின்றன.

நாடளாவிய ரீதியில் மீன் வளர்ப்புக்கு ஏதுவான வளமான நன்னீர் நிலையங்கள் அனைத்திலும் மீன் குஞ்சுகளை வளரச் செய்வதன் ஊடாக அப்பகுதிகளில் வாழும் மக்கள் தமது பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ள வாய்ப்பை ஏற்படுத்த முடியுமென்ற தூரநோக்குத் திட்டத்துக்கு அமைவாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவால் நிலையான நீர் நிலைகள் அடை யாளம் காணப்பட்டு பல லட்சம் மீன் குஞ்சுகள் விடப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக யாழ். குடாநாட்டின் நாகர்கோயில் களப்பு பகுதியில் நேற்று (வியாழக்கிழமை) ஒருதொகுதி மீன் குஞ்சகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரதிநிதியான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட உதவி நிர்வாக பொறுப்பாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தலைமையில் விடப்பட்டன. குறித்த மீன்குஞ்சுகள் சுமார் 3 முதல் 4 மாதங்களில் அறுவடை செய்யக் கூடிய வகையில் இருக்கும் என்றும் கடற்றொழிலாளர்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தற்போது நாடு எதிர்கொண்டுள்ள கொரோனா அச்சம் காரணமாக வறுமையை எதிர்கொண்டிருந்த மக்களுக்கு கடந்த காலங்களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தீர்க்கதரிசனமான குறித்த கருத்திட்டம் பேருதவியாகவும், வாழ்வாதாரமாகவும் அமைந்துள்ளதாக சுட்டிக் காட்டியிருந்ததுடன் தற்போதும் அவ்வாறான அவரது முயற்சிகள் தமக்கு பொருளாதாரத்தை பெற்றுத்தரும் என்றும் தெரிவித்த அந்தப் பகுதி மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு தமது நன்றிகளையும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ரஹ்மானை பின்னுக்குத் தள்ளி சாதனை படைத்த பாடகி யொஹானி



இலங்கையின் இளம் பாடகி யொஹானி டி சில்வா, உலகின் புகழ் பூத்த இசைக் கலைஞர்களில் ஒருவராகப் போற்றப்படும் ஓஸ்கர் நாயகன் ஏ.ஆர்.ரஹ்மானை மிஞ்சி சாதனை படைத்துள்ளார்.

யூ.டி.யூப். சனல்களில் சந்தாதாரர்களின் (அடிப்படையில் இந்த சாதனையை யொஹானி படைத்துள்ளார்.

ஏ.ஆர். ரஹ்மானின் யூடியூப் சனலின் மொத்த சந்தாதாரர்கள் 29.3 லட்சங்களாகும். அண்மையில் மெனிகே மகே ஹித்தே பாடலின் மூலம் பிரபல்யம் அடைந்த யொஹானியின் யுடியூப் சனலின் மொத்த சந்தாதாரர்கள் எண்ணிக்கை 29.6 லட்சம் என்பது குறிப்பிடத்தக்கது.

# குர்துப் படையினர் தாக்குதல் நடத்தியமையை தடுக்க அமெரிக்கா, ரஷ்யா தவறிவிட்டது என்கிறது துருக்கி



சிரியாவின் குர்துப் படையினர் தங்கள் மீது தாக்குதல் நடத்துவதைத் தடுக்க அமெரிக்காவும் ரஷ்யாவும் தவறிவிட்டதாக துருக்கி குற்றம் சாட்டியுள்ளது.

இதுகுறித்து துருக்கி வெளியுறவுத் துறை அமைச்சர் மெவ்லுட் காவுசோகுலு கூறுகையில், 'துருக்கி மீது சிரியாவின் குர்துப் படையினர் அண்மையில் நடத்தியுள்ள தாக்குதல்களுக்கு அமெரிக்காவும் ரஷ்யாவும் தான் பொறுப்பேற்க வேண்டும்.

காரணம், எங்கள் மீது தாக்குதல் நடத்தாமல் குர்துப்படையினரைக் கட்டுப்படுத்தப்போவதாக அளித்த வாக்குறுதியை அவர்கள் மீறிவிட்டனர்.

குர்துப் படையினர் எங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்குப் பயன்படுத்தப்படும் சிரியா எல்லைப் பகுதியிலிருந்து அந்த பயங்கரவாதிகளை விரட்டியடிப்பதற்குத் தேவைப்படும் எந்த நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொள்வோம்.

அண்மையில் சிரியாவிலிருந்து வீசப்பட்ட பீரங்கி குண்டு துருக்கி எல்லைக்குள் விழுந்து வீடு சேதமடைந்தது. அதனைத் தொடர்ந்து, குர்துப் படையினர் வீசிய இரண்டு சிறியவகை ஏவுகணைத் தாக்குதலில் 2 துருக்கி பொலிஸார் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலைக் கண்டித்து அமெரிக்கா அறிக்கை வெளியிட்டாலும், அதில் உண்மைத்தன்மை இல்லை.

சிரியாவிலிருந்து எங்களது வீரர்களைக் கொல்லும் பயங்கரவாதிகளுக்கு அமெரிக்காதான் ஆயுதங்களும் பயிற்சியும் அளிக்கிறது. ஆனால், அவர்கள் நடத்திய தாக்குதலுக்கு உதட்டளவில் கண்டனம் தெரிவிக்கிறது. அமெரிக்கர்கள் தாங்கள் சொன்ன வார்த்தையைக் காப்பாற்ற மாட்டார்கள் என்பதை இது உறுதி செய்கிறது' என கூறினார். இதையடுத்து, சிரியாவில் துருக்கி மீண்டும் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது.



# தாய்வானில் கோபுரத் தொகுதியில் தீ விபத்து; 46 பேர் பரிதாபகரமாக சாவு

தெற்கு தாய்வானில் 13 மாடி கோபுரத் தொகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 46பேர் உயிரிழந்துள்ளதோடு பலர் காயமடைந்துள்ளனர். நேற்று (வியாழக்கிழமை) அதிகாலையில் காவோசியுங் நகரில் உள்ள ஒரு குடியிருப்பு மற்றும் வணிகக் கட்டடத்தில் இந்த தீ விபத்து ஏற்பட்டதாக உள்ளூர் தீயணைப்புத் துறை தெரிவித்துள்ளது.

79பேர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர் எனவும் இதில் 14பேர் ஆபத்தான நிலையில் இருந்தனர் எனவும் தீயணைப்பு துறை தெரிவித்தது.

நான்கு மணி நேர கடுமையான போராட்டத்திற்கு மத்தியில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக தீயணைப்பு வீரர்கள் கூறினர்.

இந்த தீ விபத்துக்கான காரணம் இன்னமும் தெளிவாகத் தெரியாத நிலையில், புலனாய்வாளர்கள் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏழாவது மற்றும் 11ஆவது மாடிக்கு இடையில், கட்டடத்தின் குடியிருப்பு பகுதியில் மக்கள் சிக்கியிருக்கலாம் என்று அதிகாரிகள் முன்பு எச்சரித்தனர்.

தீயணைப்பு அதிகாரிகள் பின்னர் பொது மக்கள் தங்கள் குடியிருப்புகளில் அல்லது அதைச் சுற்றி குப்பைகள் தேங்காமல் இருக்கவும், படிக்கட்டுகளை தடையின்றி வைத்திருக்கவும் வலியுறுத்தினார்கள்.

கட்டடத்தின் கீழ் பகுதியில் ஒரு காலத்தில் உணவகங்கள், கரோக்கி மதுபானசாலைகள் மற்றும் ஒரு சினிமா இருந்தது, ஆனால் இவை தற்போது பயன்பாட்டில் இல்லை என்று கூறப்படுகிறது.

சுமார் 120 அடுக்குமாடி குடியிருப்புகளின் தொகுதியில் உள்ள பல குடியிருப்பாளர்கள் வயதானவர்கள் அல்லது குறைபாடுகள் உள்ளவர்கள் என்று கருதப்படுகிறது.

# வட கொரியா நாட்டில் பஞ்சம் ஏற்படும் அபாயம்

சர்வதேசதடைகள் மற்றும் கொவிட் தொற்று நோயால் எல்லைகள் மூடப்பட்டுள்ளமை போன்ற காரணங்களால் வட கொரியாவில் உணவுப் பஞ்சம் ஏற்படும் அபாயம் உள்ளதாக அந்நாட்டில் உள்ள ஐ.நா. அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

குறிப்பாக சிறுவர்கள் மற்றும் முதியோர் கடும் பட்டினியால் பாதிக்கப்படும் ஆபத்து உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

உணவு பஞ்சத்தால் வட கொரியா கொல்லி மற்றும் எரிபொருளுக்காக சீனாவையே வட கொரியா நம்பியுள்ளது.

இதேவேளை, நாடு மிக மோசமான நிலையை எதிர்கொண்டுவருவதாக வட கொரிய தலைவர் கிம் ஜாங் உன் தெரிவித்ததாக அந்நாட்டு அரச ஊடகங்கள் கடந்த வாரம் செய்தி வெளியிட்டன.

நிலைமை மோசமடைவதைத் தவிர்க்க வட கொரியா மீது சர்வதேச நாடுகள் விதித்திருக்கும் தடையை





மக்கள் மரியாதையுடன் வாழும் ஒரு வாழ்க்கையை இழந்து வருகின்றனர் என ஐ.நா. அதிகாரி குவாண்டானா சுட்டிக்காட்டியுள்ளார்.

வட கொரியா அணு ஆயுத சோதனைகளை மேற்கொண்டதால் அந்நாட்டின் மீது பல நாடுகள் தடைகளை விதித்துள்ளன. இந்நிலையில் நெருக்கடியைத் தீர்க்கும் வகையில் தடைகளை நீக்க வேண்டும் எனவும் அந்த அதிகாரி வலியுறுத்தினார்.

கொரோனாத் தொற்றிலிருந்து தப்ப சீனாவுடனான எல்லையை வடகொரியா மூடியதால் அந்நாட்டுடனான வணிகம் பாதிக்கப்பட்டுள்ளது. உணவு, பூச்சிக் தளர்த்துவதற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபை வழிசெய்ய வேண்டும். அங்கு உடனடி உயிர்காக்கும் உதவிகள் சென்று சேர்வதை உறுதி செய்ய வேண்டும் எனவும் ஐ.நா. அதிகாரி குவாண்டானா தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் வட கொரியாவுடன் பேச்சு நடத்த தயார் என அமெரிக்கா தெரிவித்து வருகிறது. அந்நாடு மீதான பொருளாதாரத் தடைகளை நீக்க முன்னர் அணு ஆயுதங்களை கைவிட வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வலியுறுத்தியுள்ளார். ஆனால் இந்த நிபந்தனையை ஏற்க வட கொரியா மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கொவிட் தொற்றின் மூலாதாரத்தைக் கண்டறிய உலக சுகாதார அமைப்பால் நிபுணர் குழு அமைப்பு

கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றின் மூலாதாரத்தைக் கண்டறிவதற்கான புதிய நிபுணர் குழுவை உலக சுகாதார அமைப்பு அமைத்துள்ளது.

கொரோனா எங்கு தோன்றியது என்பதைக் கண்டறிவதற்கான கடைசி முயற்சியாக இது இருக்கலாம் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

புதிய நோய்க்கிருமிகளின் மூலத்திற்கான அறிவியல் ஆலோசனைக் குழுவில் 26பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். கொரோனா முதன்முதலில் கண்டறியப்பட்ட சீனாவின் வூஹான் நகரில் உள்ள இறைச்சி சந்தை அல்லது ஆய்வகத்தில் இருந்து இது பரவியதா என்று இந்தக் குழு ஆராயும்.

முன்னதாக உலக சுகாதார அமைப்பின் நிபுணர் குழுவினர் சீனாவின் வூஹான் ஆய்வகத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். ஆனால் அங்கு வைரஸ் பரவியதற்கான எந்தவித ஆதாரங்களும் கிடைக்கவில்லை.

இதனிடையே, ஆய்வகத்தில் இருந்து பரவியதாகக் கூறப்படும் கூற்றை சீனா தொடர்ந்து கடுமையாக மறுத்து வருகிறது.

கொரோனா வைரஸ் பரவலில் சீனாவுக்கு ஆதரவாக உலக சுகாதார அமைப்பு செயல்பட்டதாக அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# வார இறுதி நாள்களிலும் வழிபாட்டிடங்களைத் திறக்க அனுமதி பொது நிகழ்வுகளுக்கான தடை நீடிப்பதாக தமிழக அரசு அறிவிப்பு



தமிழ்நாட்டில் நடைமுறையிலுள்ள கொரோனாக் கட்டுப்பாடுகள், ஊரடங்கு நீடிப்பு மற்றும் கூடுதல் தளர்வுகள் குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் இன்று ஆலோசனை நடத்தியிருந்தார். அந்த ஆலோசனைக் கூட்டத்தில் வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் வழிபாட்டுத்தலங்கள் திறக்கப்படுகின்றமை, அரசியல் கூட்டங்கள் நடப்பது, சமுதாயக் கூடங்களைத் திறப்பது உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டது. ஆலோசனையின் முடிவில், அனைத்து வழிபாட்டுத்தலங்களிலும் வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் வழிபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முன்னதாக வாரத்தில் திங்கள் முதல் வியாழன் வரை மட்டுமே வழிபாட்டிடங்கள் திறக்கப்பட்டிருந்தன. இந்த வழக்கத்தை மாற்றி வெள்ளி, சனி, ஞாயிறுகளிலும் அவற்றைத் திறக்க அனுமதிக்கவேண்டுமென சில தினங்களுக்கு முன் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடுக்கப்பட்டிருந்தது. அது தொடர்பான விசாரணையில் தமிழக அரசே முடிவெடுக்கலாம் என நீதிமன்றம் கூறியிருந்தது.

இந்த நிலையில், வழிபாட்டிடங்களை வார இறுதி நாள்களில் திறக்கவும், ஞாயிற்றுக்கிழமைகளில் பொதுமக்கள் கடற்கரைகளுக்குச் செல்லவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆயினும், அரசியல் கூட்டங்கள், திருவிழாக்கள், சமுதாய, கலாசார நிகழ்வுகளுக்கான தடை தொடர்ந்தும் நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆர்யன்கானுக்குப் பிணை வழங்கவேண்டாமென அனில் சிங்கால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

மும்பை உல்லாசக்கப்பலில் தடைசெய்யப் பட்ட போதைப்பொருள் பயன்படுத்தினார் என கைது செய்யப்பட்டுள்ள பிரபல பொலிவுட் நடிகர் ஷாருக்கானின் மகன் ஆர்யன் கானின்பிணை மனு மீதான விசாரணை மும்பை நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.

இந்த விசாரணையின்போது தேசிய போதைப்பொருள் தடுப்புப்பிரிவின் கூடுதல் செய்யப்பட்டது.போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டபோது ஆர்யன்கானும் அவருடன் இருந்தார் என்று நீதிமன்றத்தில் தெரிவித்துள் ளார்.

ஆர்யன் கானுக்கு பிணை வழங்குவதற்கு எதிராக வாதிட்ட அனில் சிங், இது மகாத்மா காந்தி யின் பூமி, இதுபோன்ற போதைப்பொருள் பயன்பாடு சிறுவர்களையும் இளைஞர்களையும்



சொலிஸிட்டர் ஜெனரல் அனில் சிங், ஆர்யன் கான் ஒரு முறை மட்டும் போதை மருந்து உட்கொள்ளவில்லை. கிடைத்த அறிக்கையின் படி அவர் கடந்த சில வருடங்களாக அதைப் பயன்படுத்தியுள்ளார் எனத் தெரிகிறது. அவரது நண்பர் அர்பாஸ் என்பவரிடம் இருந்து ஆறு கிராம் சரஸ் போதைப்பொருள் பறிமுதல் மிகவும் பாதிக்கிறது. விசாரணை ஆரம்ப கட்டத்தில் உள்ளது. எனவே இது பிணை வழங்குவதற்கான தருணம் அல்ல என்று கூறினார்.

இந்த மனுமீதான அடுத்த அமர்வை வரும் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிமன்றம், ஆர்யன் கானை பொதுச் சிறைக்கு மாற்ற உத்தரவிட்டுள்ளது.



## நமக்கான காலம் நிச்சயம் வரும் என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் அறிக்கை

தமிழக உள்ளாட்சித் தேர்தலில் வெற்றிபெற்ற தே.மு.தி.கவினர் மற்றும் தே.மு.தி.க. சார்பில் சுயேச்சையாக போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு பாராட்டுத் தெரிவித்திருக்கும் கட்சித் தலைவர் விஜயகாந்த், 'நமக்கான காலம் நிச்சயம் வரும்' எனக்கூறி நம்பிக்கையளித்திருக்கிறார்.

தனது சமூகவலைத்தளங்களில் பதிவிட்டுள்ள அவர், ஒன்பது மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப் பட்டுள்ளன. இதில் திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி ஒன்றியத்திற்குட்பட்ட தும்பேரி இரண்டாவது வார்ட் ஒன்றிய கவுன்ஸிலர் பதவிக்கு முரசுச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற திருமதி செல்வி பழனிக்கு எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதேபோல் தே.மு.தி.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களுக்கும், சுயேச்சையாக போட்டியிட்டு வெற்றிபெற்ற வேட்பாளர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தே.மு.தி.க. வேட்பாளர்களின் வெற்றிக்காக அரும் பாடுபட்ட அனைத்து மாவட்ட செயலாளர்கள், கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் என அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்தலில் வெற்றி தோல்வி என்பது சகஜம். அதிகார பலம், பண பலத்தை மீறி நாம் தேர்தல் களத்தில் நிற்கிறோம். உண்மை, நேர்மை, உழைப்பை மட்டுமே நம்பி நாம் தேர்தலை எதிர் கொண்டோம். நமக்கான காலம் நிச்சயம் வரும். அதுவரை கழகத் தொண்டர்கள் துவண்டு விடாமல் வெற்றியை நோக்கி அயராது பாடுபட வேண்டும் எனக்குறிப் பிட்டுள்ளார்.



## சென்னைத் துறைமுகம் முதல் மணலி வரை கடலுக்குள் உயர்மட்டப் போக்குவரத்துப் பாலம்

சென்னைத் துறைமுகம் முதல் மணலி வரை ஏழரைக் கிலோ மீற்றர் தொலைவில், கடலுக்குள் உயர்மட்ட பாலம் கட்டும் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன என துறைமுகத் தலைவர் சுனில் பாலிவால் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்த அவர் தகவல் வழங்கியபோது, சென்னைத் துறைமுகத்திற்கு வரும் சாதாரண வாகனங்கள் மற்றும் பாரவூர்திகள் மூலம் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால், சென்னை துறைமுகத்திலிருந்து மணலி வரை 7.6 கிலோ மீட்டருக்கு கடல் பகுதியில் உயர்மட்ட மேம் பாலம் அமைப்பதற்கான பணிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன எனத் தெரிவித்தார். அதேபோல சென்னைத் துறைமுகத்தில் இருந்து மதுரவாயில் வரை 20 கிலோ மீற்றருக்கு இரண்டு அடுக்கு மேம்பாலம் கட்டும் பணிகள் ஆறாயிரம் கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் விரைவில் தொடங்கும் என்றும் கூறினார். அது நான்கு தடம், ஆறு தடம் கொண்ட பாதைகளோடு அமைக் கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

## அதிக குழந்தைகள் பெற்றோருக்கு பரிசு வழங்கி பாராட்டிய அமைச்சர்




இந்தியாவின் மிசோரம் மாநிலத்தில் அதிக குழந்தை பெற்ற பெற்றோருக்கு அம் மாநில அமைச்சர் ஒருவர் பரிசுகள் வழங்கி பாராட்டியுள் ளார்.

மிசோரம் மாநிலத்தில் பூர்வீகக் குடிகளின் எண்ணிக்கை வேகமாக குறைந்து வருகிறது. அந்த எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக மிசோரம் விளையாட்டுத் துறை அமைச்சர் ராபர்ட் ரோமாவியா வித்தியாசமான அறிவிப்பு ஒன்றை வெளியிட் டார். தனது அய்சால் கிழக்குத் தொகுதியில் அதிக குழந்தைகளை பெற்றிருக்கும் பெற்றோருக்கு பரிசுகள் வழங்கப்படும் என அறிவித்தார்.

இதன்படி துய்தியாங் பகுதியைச் சேர்ந்த 15 பிள்ளைகள் பெற்றிருக்கும் பெண் ஒருவருக்கு முதல் பரிசாக ஒரு லட்சம் ரூபா வழங்கி அவர் கௌரவித்தார். அடுத்தபடியாக 13 பிள்ளைகள் பெற்ற பெண்ணுக்கு 30 ஆயிரம் ரூபாவும், 12 பிள்ளைகள் பெற்ற 3 பேருக்கு பரிசாக தலா 20 ஆயிரம் ரூபாவும் வழங்கி அமைச்சர் பாராட்டியிருக்கிறார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஏறாவூரில் புதிய விசேட துணி உற்பத்தி வலயம்



மட்டக்களப்பு – ஏறாவூரில் ஒரு புதியவிசேடதுணிஉற்பத்திவலயத்தை அமைக்க அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

400 ஏக்கர் பரப்பில் இந்த விசேட வலயம் அமைக்கப்படவுள்ளதாக நாடாளுமன்ற ஊடகப் பிரிவினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பாவின் தலைமையில் கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க நிதி தொடர்பான குழுவின் கூட்டத்தின் போது இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வெளநாட்டு சந்தைகளை இலக்காகக் கொண்டு, உயர் தரத்திலான துணிகளின் உற்பத்திகளை ஆரம்பிப்பதற்கு ஏறாவூர் பகுதியிலுள்ள இரண்டு தொழிற்சாலைகள் விருப்பம் தெரிவித்துள்ளன என இலங்கை முதலீட்டு சபையின் பணிப்பாளர் நாயகம் இதன்போது கூறியுள்ளார்.

நாடு தற்போதுள்ள நிலையில், முதலீட்டு வாய்ப்புகள் மிகவும் முக்கியமானவை எனவும், அனைத்து துணி உற்பத்தியாளர்களுக்கும் சம வாய்ப்புகளும் வரி நிவாரணங்களும் வழங்கப்படுவது அவசியம் எனவும் அரசாங்க நிதி தொடர்பான குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.



# அம்பாறையில் அதிகரித்துவரும் காட்டு யானைகளின் தொல்லை

அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்துவரும் யானைகளின் தொல்லையால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதுடன் சொத்துக்களும் பெருமளவில் யானைத்தாக்குதலுக்கு இலக்காகி வருகின்றன. அதன் தொடர்ச்சியாக இன்று அதிகாலை இரண்டு மணியளவில் கல்முனை மாநகர சாய்ந்தமருது 3 ஆம் பிரிவில் உள்ள பிரதேசங்களுக்கு சென்ற யானை அங்கிருந்த பயிர்நிலங்களை முற்றாக சேதமாக்கியுள்ளதுடன், பயிர்கள், மரங்களை முற்றாக அழித்துள்ளது. இதன்மூலம் அருகில் குடியிருந்த பலரும் உயிரச்சுறுத்தலுக்கு இலக்காகி உள்ளனர்.

நேற்றிரவு சாய்ந்தமருதில் புகுந்து சுற்றுமதில்களை அடித்து நொறுக்கியிருக்கும் யானை, பயிர் நிலங்களுக்கு அண்மையில் உள்ள அரிசி ஆலையொன்றினுள் புகுந்து அங்கிருந்த சேமிப்பறையை உடைத்து நெல் மூட்டைகளையும் சாப்பிட்டு விட்டு சென்றுள்ளது. இதனால் பாரியளவு பொருளாதார நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் பல அரச அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளோம் எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர். அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களும் சமீபத்தைய நாள்களில் இப்படியான யானைத் தாக்குதலுக்கு இலக்காகி வருவதுடன் வன இலாகா அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்துவதில்லை என்ற பரவலான குற்றச்சாட்டு மக்கள் மத்தியில் நிலவி வருகின்றது. இதுதொடர்பில் இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவை தலையிட்டு நிரந்தரத் தீர்வை பெற்றுத் தருமாறு மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

# கசிப்பு உற்பத்தி செய்த நபரொருவர் கைதானார்

மட்டக்களப்பு, கிரான் பிரதேசத்தில் நேற்று அதிகாலை 1 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பில், வீடொன்றில் கசிப்பு உற்பத்தியை முன்னெடுத்திருந்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

50,000 மில்லி லீற்றர் கசிப்பு, 40,000 மில்லிலீற்றர் கோடா மற்றும் கசிப்பு தயாரிக்கும் பெருமளவு உபகரணங்களும் இதன் போது கைப்பற்றப்பட்டன என மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி ஐ.பி.பண்டார தெரிவித்தார்.

கிடைக்கப் பெற்ற தகவலொன்றையடுத்தே, கிரானிலுள்ள குறித்த வீட்டைச் சுற்றிவளைத்த பொலிஸ் உத்தியோகத்தர்கள், கசிப்பைக் கைப்பற்றியதுடன், சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.



# மட்டக்களப்பு செங்கலடி பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செங்கலடி பிரதேசத்தில் நேற்று மாலை மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பில் வீடொன்றில் இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றி வளைக்கப்பட்டதாக குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி.பண்டார தெரிவித்தார்.

செங்கலடி பொதுச் சந்தை வீதியிலுள்ள வீடொன்றை தகவலொன்றின் அடிப்படையில் சுற்றி வளைத்த பொலிஸார் அங்கு சூட்சுமமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டனர்.

அங்கு கசிப்பு காய்ச்சிய நிலையில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டமை 11,000 மில்லி லீற்றர் கசிப்பு 40,000 மில்லி லீற்றர் கோடா மற்றும் கசிப்பு தயாரிக்கும் பெருமளவு உபகரணங்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேக நபர் ஏறாவூர் சுற்றுலா நீதின்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# மூதூரில் காணி அபகரிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட திருகோணமலை மட்டக்களப்பு பிரதான வீதியில் அமைந்துள்ள 64ம் கட்டை மலையில் அமைக்கப்படவுள்ள பௌத்த விகாரைக்காக பொது மக்களின் விவசாயக் காணிகளை அபகரிப்பு செய்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதேச செயலகத்திற்கு முன்பாக கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டமும் பேரணியும் பாதிக்கப்பட்ட மக்களால் நடத்தப்பட்டது.

மேலும் காணி அபகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து மகஜர் ஒன்றும் மூதூர் பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.

# இரண்டாவது பயிற்சிப் போட்டியிலும் இலங்கை அணி வெற்றிபெற்றது

இலங்கை மற்றும் பப்புவா நியூகினியா அணிகளுக்கிடையில் நடைபெற்ற ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான பயிற்சிப் போட்டியில், இலங்கை அணி 39 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

அபுதாபியில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது. பதும் நிஸ்ஸங்க 76 ஓட்டங்களையும், அவிஷ்க பெர்னாண்டோ 61 ஓட்டங்களையும் எடுத்தனர். பப்புவா நியூகினியா அணியின் கபுவா மொரெயா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார்.

அடுத்ததாகத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பப்புவா நியூகினியா அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 123 ஓட்டங்களை மட்டும் பெற்று தோல்வியினை தழுவியது. அணித்தலைவர் அஸாத் வலா 51 ஓட்டங்களை எடுத்தார். இலங்கை அணியின் வனிந்து ஹஸரங்க மற்றும் துஷ்மந்த சமீர இருவரும் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இந்தப்போட்டியின் வெற்றியோடு இலங்கை அணி பயிற்சிப் போட்டிகள் இரண்டிலும் வெற்றி பெற்று, ரி-20 உலகக் கிண்ணத்திற்கான தனது முதல் போட்டியில் எதிர்வரும் 18 ஆம் திகதி நமீபியாவை எதிர்கொள்ளவுள்ளது.



## சாவ் சம்பியன்ஷிப் கால்பந்தாட்டத்தொடர் இறுதிப்போட்டிக்கு முன்னேறியது இந்தியா



மலைதீவுகளில் நடைபெற்றுவரும் தெற்காசிய கால்பந்தாட்டச் சம்பியன்ஷிப் (சாவ்) தொடரில் தனது இறுதி லீக் ஆட்டத்தில் மாலைதீவுகளை எதிர்கொண்ட இந்தியா 3-1 என வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

ஆட்டத்தின் 33 ஆவது நிமிடத்தில் இந்திய வீரர் மன்விர் சிங் முதல் கோலை அடித்தார். அதற்குப் பதிலடியாக 45 ஆவது நிமிடத்தில் மாலைதீவுகளின் அலி அஸ்வக் கோலடித்து சமன் செய்தார்.

போட்டியின் இரண்டாவது பாதியில் இந்திய அணித்தலைவர் சுனில் சேத்ரி அபாரமாக விளையாடி, 62ஆவது, 71 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து கோல்களை அடித்தார். இதனால் 3-1 என வெற்றி பெற்று இந்திய அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இதுவரை 124 போட்டிகளில் விளையாடியுள்ள சுனில் சேத்ரி 79 கோல்கள் அடித்திருக்கிறார். நாளை நடைபெறவிருக்கும் இறுதிப்போட்டியில் நேபாள அணியை எதிர்கொள்ளவுள்ளது இந்தியா.

## டேவிஸ் கோப்பை டென்னிஸ் தொடரில் அன்டி மரே விளையாடமாட்டாராம்



ஆஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ் தொடருக்கு தயாராகவேண்டியுள்ளதால் அடுத்த மாதம் 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள டேவிஸ் கிண்ண டென்னிஸ் தொடரில் பங்கேற்கப்போவதில்லை என அன்டி மரே தெரிவித்துள்ளார்.

34 வயதாகும் அன்டி மரே பிரிட்டன் நாட்டைச் சேர்ந்தவர். 3 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள இவர் உலகின் முதல் நிலை வீரராகத் திகழ்ந்தவர்.

அடுத்த வருடத்தொடக்கத்தில் ஆஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ் தொடர் ஆரம்பமாகவுள்ளது.

டேவிஸ் கிண்ணம், ஆஸ்திரேலியன் ஓபன் என அடுத்தடுத்து இரு பெரிய தொடர்கள் நடைபெற இருக்கின்றன.

எனவே ஒரு தொடரில் மட்டும் முழுவதுமாக கவனம் செலுத்த விரும்புவதாலும், தனது உடலுக்கு சிறிது ஓய்வளிக்க விரும்புவதாலும் இந்த முடிவை எடுத்திருக்கிறேன் என அவர் தெரிவித்திருக்கிறார். ஓய்வின் பின்னர் ஆஸ்திரேலிய ஓபன் போட்டியில் முழு ஈடுபாட்டுடன் களம் இறங்குவேன் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார்.



## ஐ.பி.எல். தொடரின் இறுதிப்போட்டி இன்று டுபாயில் நடைபெறுகிறது

ஐ.பி.எல். ரி-20 தொடரின் இறுதிப் போட்டி இன்று டுபாயில் நடைபெறுகிறது. இந்தப் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிகள் மோதுகின்றன. நடப்பு தொடரில் கொல்கத்தா அணிக்கு எதிராக நடைபெற்ற இரண்டு லீக் போட்டிகளிலுமே சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வெற்றிபெற்றுள்ளது. எனவே, இறுதிப்போட்டியிலும் அந்த அணிக்கான வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

ஐ.பி.எல். தொடரில் சென்னை அணி இதுவரை மூன்று முறை சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. கொல்கத்தா அணி இரண்டு முறை சம்பியன் ஆகியுள்ளது.



## ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் சம்பியனாவோம் என பாபர் அசாம் நம்பிக்கை

ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் வரும் 17 ஆம் திகதி தொடங்கி நவம்பர் 14 வரை நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், உலகக் கிண்ணத்தை நிச்சயம் வெல்வோம் என பாகிஸ்தான் அணித்தலைவர் பாபர் அசாம் தெரிவித்துள்ளார்.

ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணியின் தலைவராகச் செயற்படுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன் என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் கடந்த 3 ஆண்டுகளுக்கும் மேலாக போட்டிகளில் விளையாடி வருவதால், அங்கு நிலவும் காலநிலையும் ஆடுகளங்களும் தங்களுக்கு நன்கு பரிச்சயமாகியுள்ளன என்று குறிப்பிட்டிருக்கும் அவர், எனவே, தாங்கள் இந்தமுறை நிச்சயம் கிண்ணத்தைக் கைப்பற்றுவோம் என குறிப்பிட்டுள்ளார்.

# அரசின் அசமந்தப் போக்கால் மீனவர்களுக்கு பெரும்பாதிப்பு!







நாட்டில் அரசின் அசமந்தப்போக்கால் மீனவர் சமூகம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர், கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளை ஆராயும் நேற்றைய சுற்றுப்பயணத்தில் கலந்துகொண்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு – எக்ஸ் – பிரஸ் பேர்ல் கப்பல் தீ விபத்தால் மீனவர் சமூகத்துக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு இழப்பீடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. அரசு, பன்னாட்டு நிறுவனங்களின் கைப்பொம்மையாக மாறிவிட்டது.

நாட்டில் உள்ள மீனவ சமூகத்தின் உரிமைகளை வெளிநாட்டு டொலர் தரகர்களிடம் ஒப்படைத்துள்ளது. நாட்டின் மீன்பிடித் தொழிலில் புரட்சிகர மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். – என்றார். அம்பலாங்கொடை மீன்பிடித் துறைமுகத்தை அண்டியுள்ள மீனவர் சமூகத்தை எதிர்க்கட்சித் தலைவர் நேற்று சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடினார்.

இதன்போது, மீனவர்கள் தமது பிரச்சினைகளைக் கூறி ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

## மின் மயானத்திற்கு தனது சொந்த நிதியில் 5 லட்சம் ரூபா வழங்கினார் சிறிதரன் எம்.பி!

கிளிநொச்சிக்கு மின் தகன மயானம் ஒன்று அமைக்க வேண்டும் என்ற கருப்பொருளை உருவாக்கி அதனை தமது ஆளுகைக்கு கீழ் இருக்கும் கரைச்சி பிரதேச சபையின் பொறுப்பில் வழங்கி இந்த வருடத்துக்குள் நிறைவுசெய்ய வேண்டும் என தவிசாளருக்கு ஆலோசனை வழங்கினார் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் எம்.பி.

அதுமட்டுமல்லாது பல நிதி கொடையாளர்களிடம் பேசி பல மில்லியன் ரூபா நிதிகளை பெற்றுக்கொடுத்தமையோடு மட்டுமல்லாது மின் தகன மயானம் அமைப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தனது சொந்த நிதியில் இருந்து 5 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளார்.

தற்போது கிளிநொச்சியில் கொரோனா காரணமாக மரணமடையும் உடலங்களை வேறு மாவட்டங்களுக்கு கொண்டு செல்வதற்கு ஏற்படும் செலவு நிதியையும், பிரேத வாகன சாரதிக்கான சம்பளத்தையும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனே தனது சொந்த நிதியில் இருந்து வழங்கி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கடின பௌத்த பூஜையில் 20 பக்தர்களுக்கு அனுமதி

கொரோனாத் தொற்று காரணமாக இவ்வாண்டு கடின பௌத்த பூஜையை சுகாதார நடைமுறைகளின் அடிப்படையில் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் மேற்படி பூஜையில் 20 பக்தர்கள் கலந்துகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தர்ம உபதேசத்திலும் 20 பக்தர்கள் கலந்துகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## தனிமைப்படுத்தல் கட்டுப்பாடுகளை மீறி கொவிட்டுடன் நடமாடியவர் மடக்கிப் பிடிப்பு

கொவிட் தொற்று காரணமாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த நபர் ஒருவர் நடமாடித் திரிகிறார் என வவுனியா சுகாதாரப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலையடுத்து அவர், கைது செய்யப்பட்டு கொவிட் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, சிவபுரம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் அவர் சிகிச்சைக்காக அவரது வீட்டில் சுய தனிமைப்படுத்தப்பட்டிருந்தார்.

இந்நிலையில், குறித்த கொவிட் தொற்றாளர் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறி கொவிட் தொற்றுடன் வீட்டில் இருந்து வெளியேறி பல்வேறு வேலைகளில் ஈடுபடுகிறார் எனவும், நடமாடித் திரிகிறார் எனவும் சுகாதாரப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலையடுத்து சுகாதாரப் பிரிவினரும், பொலிஸாரும் இணைந்து மேற்படி நபரை தேடி விசேட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது சிறிய ரக டிரக்டரில் கல் ஏற்றிச் சென்ற நிலையில் அந்த கொவிட் தொற்றாளர் சுகாதாரப் பிரிவினரால் கண்டு பிடிக்கப்பட்டு, அவர் உடனடியாகவே வவுனியா, மதவுவைத்தகுளம் பகுதியில் அமைந்துள்ள கொவிட் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் என சுகாதாரப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

## நூதனசாலைகளை திறப்பதற்கு முடிவு

சுற்றுலாப்பயணிகளுக்காக நாட்டின் அனைத்து நூதனசாலைகளையும் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மத்திய கலாசார நிதியத்தின் கீழுள்ள நூதனசாலைகளைத் திறப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மத்திய கலாசார நிதியம் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக அந்த நிதியம் தெரிவித்துள்ளது.

## தொழிலதிபர் ஷியாமின் கொலை; உயர் நீதிமன்றில் மேன்முறையீடு

கோடீஸ்வர தொழிலதிபர் முகமது ஷியாமின் கொலை வழக்கில் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளித்ததை எதிர்த்து, பொலிஸ் முன்னாள் பிரதி அதிபர் வாஸ் குணவர்த்தன, அவரது மகன் ரவிந்து வாஸ் குணவர்தன மற்றும் நான்கு பொலிஸ் அதிகாரிகள் நேற்று (வியாழக்கிழமை) உயர்நீதிமன்றில் மேன்முறையீடு செய்துள்ளனர்.

இதனையடுத்து , நீதியரசர்கள் பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட, ப்ரீத்தி பத்மன் சூரசேன, காமினி அமரசேகர மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் அடங்கிய அமர்வு அடுத்த ஆண்டு பெப்ரவரி 8 ஆம் திகதி முதல், இது தொடர் பான விசாரணையை தினந் தோறும் நடத்தவுள்ளது. முகமட் ஷியாம் கொலை தொடர்பில், முன்னாள், பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன, அவரது மகன் ரவிந்து வாஸ் குணவர்தனா மற்றும் நான்கு பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தால் வழக்குத் தொடரப்பட்டது. இந்தநிலையில் தங்கள் மேல் முறையீட்டின் மூலம், குற்றம் சாட்டப்பட்ட 6 மேல்முறையீட்டாளர்கள், உயர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பை மறு ஆய்வு செய்து விதித்த மரண தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று கோரியுள்ளனர்.

## மக்களின் நடத்தைகள் குறித்து சுகாதாரப் பணிப்பாளர் அதிருப்தி

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள கட்டுப்பாடுகள் இன்று கூடவுள்ள கொவிட் பணிக்குழு கூட்டத்தில் மேல் பரிசீலனை செய்யப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதன்படி தற்போதுள்ள விதிமுறைகளை கடுமையாக்க அல்லது தளர்த்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை,கடந்த இரண்டு நாள்களில் மக்களின் நடத்தை திருப்திகரமாக இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் தொற்றுநோயை சமாளிக்க, சுகாதாரத் துறைக்கு மக்களின் ஆதரவு தேவை என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதற்கிடையில், தீவிர சிகிச்சை பிரிவில் உள்ள கொவிட் நோயாளிகளின் எண்ணிக்கை 50 வீதம் குறைந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.